# தஞ்சை வஉசி நகரில் ரூ.26லட்சத்தில் நூலகம் திறப்பு மாநகராட்சி ஏற்பாடு

பதிவு செய்த நேரம்:2016-02-24 09:58:55 dinakaran

தஞ்சை, : தஞ்சை மாநகராட்சி சார்பில் வஉசி நகரில் ரூ.26 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அம்மா நூலகம் திறந்து வைக்கப்பட்டது. விழாவில் மேயர் சாவித்திரி கோபால் அனைவரையும் வரவேற்றார். எம்பி பரசுராமன், எம்எல்ஏ ரெங்கசாமி, மாநகராட்சி துணை மேயர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அம்மா நூலகத்தை அமைச்சர் வைத்திலிங்கம் திறந்து வைத்தார். ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டுப்பட்டுள்ள இந்நூலகத்தில் ரூ.6 லட்சம் மதிப்பில் 9 கணினிகள், ஜெராக்ஸ் இயந்திரம், சிசிடிவி கேமரா, இணையதள வசதி செய்யப்பட்டுள்ளன. தடையில்லா மின்சாரம், அளவில்லா இணைய வசதி செய்யப்பட்டுள்ளன. மாணவ, மாணவிகள் அரசு வழங்கியுள்ள மடிக்கணினியை கொண்டு வந்தும் இணையதள வசதியை பெற்றுக் கொள்ளலாம். ஒரு மாணவர் தன் விருப்ப பாடத்தை கணினி வாயிலாக பயிலும் போது மற்றவர்களுக்கு இடையூறு இன்றி இருப்பதற்கு ஹெட்போனை பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரே நேரத்தில் குறைந்தது 40 மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிக்க ஒயிட் போர்டுடன் கூடிய மார்க்கர், எல்.சி.டி. புரொஜெக்டர் வசதிகளுடன் கூடிய வகுப்பறையுடன் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை தன்னார்வலர்கள், தொண்டு நிறுவன மாணவ, மாணவிகள் சிறப்பு வகுப்பு எடுக்க பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் குறைந்த விலையில் ஜெராக்ஸ் மாணவர்கள் எடுத்துக் கொள்ளலாம். தாங்கள் விரும்பிய பாடத்தை குறுந்தகட்டில் நகல் எடுத்துக் கொள்ள மாணவ, மாணவிகள் அனுமதிக்கப்படுவர். அரசு இணையதளத்தில் உள்ள வசதிகளை இங்கிருந்து இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். www.ammalibtcmc.com என்பது அம்மா நூலகத்தின் இணையதள முகவரியாகும். இந்த இணையதளம் வாயிலாக உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் உள்ள மின்னணு செய்தித்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து தஞ்சை திலகர் திடலில் மாநகராட்சி சார்பில் ரூ.31 லட்சம் மதிப்பீட்டில் அம்மா மாலை நேர காய்கறி அங்காடியை அமைச்சர் வைத்திலிங்கம் திறந்து வைத்தார். மேலும் ரூ.8.25 லட்சம் மதிப்பீட்டில் 16 மீட்டர் உயரம் கொண்டு 800 வாட்ஸ் கொண்ட 8 உயர்மின் கோபுர விளக்கையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆணையர் வரதராஜ், நகர்நல அலுவலர் வரதராஜன், வருவாய் அலுவலர் சுரேஷ்குமார், கணக்கர் மற்றும் மேலாளர் கிளமெண்ட் அந்தோணிராஜ், உதவி நகர்நல அலுவலர் ராஜசேகரன், கணினி பிரிவு சுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

http://www.dinakaran.com/District_Detail.asp?Nid=540296&cat=504